©
தமிழ்நாடு அரசு
2009

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 0.80 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 45] சென்னை, புதன்கிழமை, நவம்பர் 18, 2009
கார்த்திகை 2, திருவள்ளுவர் ஆண்டு—2040

## பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

---

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை**

**அறிவிக்கை**

*[அரசாணை (நிலை) எண் 17, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J2)த் துறை, நாள்: 23 பிப்ரவரி 2009.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 11/1948) 5ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (a) பகுதியிலும், 9ஆம் பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு 29—3—2006ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம்—II—பிரிவு 2, 145 மற்றும் 146ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட, தொழிலாளர் வேலைவாய்ப்புத் துறையின், II (2)/தொ.வே.வா./192/2006ஆம் எண் அறிவிக்கையை ரத்துசெய்துவிட்டு, அதற்கு பதிலாகவும் தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், கல் மற்றும் ஏனைய பொருட்களைக் கொண்டு சிற்பம் செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு குறைந்தளவு ஊதிய வீதங்களை நிர்ணயிப்பதைப் பொறுத்தமட்டில், விசாரணை நடத்தவும், மாநில அரசுக்கு ஆலோசனை நல்கவும், பின்வரும் உறுப்பினர்களைக் கொண்ட குழுவை இதனால் நியமிக்கிறார்:—

**தனி நபர்கள்:**

| | | | |
|---|---|---|---|
| (1) | தொழிலாளர் நலத் துணை ஆணையர், திருச்சிராப்பள்ளி. | .. | தலைவர் |
| (2) | தொழிலாளர் நல ஆய்வாளர், திருச்சிராப்பள்ளி. | .. | செயலாளர் |
| (3) | உதவி இயக்குநர், பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறை ஆணையாளர் அலுவலகம், சென்னை — 600 006. | .. | தனி உறுப்பினர் |

**தொழிலளிப்பவரின் பிரதிநிதிகள்:**

| | | | |
|---|---|---|---|
| (1) | திரு. ஏ.ஆர். பரமேஸ்வரன், உரிமையாளர், ஸ்ரீ தரைக்குடி அம்மன் சிற்ப நிறுவனம், ஜீவா தெரு (வழி முருகன் கோவில்), பூண்டி, கோயம்புத்தூர்—641 652. | .. | உறுப்பினர் |
| (2) | திரு. ஏ.ப்பி.எஸ். ஆண்ட்ரூ, உரிமையாளர், அருளானந்தா கிரானைட் மற்றும் மார்பிள்ஸ் நிறுவனம், முத்தாலக்குறிச்சி, தக்கலை—629 175, கன்னியாகுமரி மாவட்டம். | .. | உறுப்பினர் |

**தொழிலளிப்பவரின் பிரதிநிதிகள்**—*தொடர்ச்சி*

| | | | |
|---|---|---|---|
| (3) | திரு. வி. விஸ்வநாதன், உரிமையாளர்,<br>விசு கட்டடக்கலை மற்றும்<br>சிற்பக்கலை நிறுவனம்,<br>6, மாதா கோவில் தெரு, மாமல்லபுரம். | .. | உறுப்பினர் |

**தொழிலாளர் பிரதிநிதிகள்:**

| | | | |
|---|---|---|---|
| (1) | திரு. எஸ். கஸ்த்தூரிரங்கன்,<br>(இந்திய வர்த்தகச் சங்க மையம்),<br>வெண்மணி இல்லம், கரூர் புறவழிச் சாலை,<br>திருச்சி—620 002. | .. | உறுப்பினர் |
| (2) | திரு. ட்டி. கந்தா ஸ்தபதி,<br>செயலாளர், தஞ்சாவூர் மாவட்ட<br>கலை மற்றும் கைத்திறத்<br>தொழில் நலச் சங்கம்,<br>19/9, ராஜ வீதி, சுவாமிமலை—612 302. | .. | உறுப்பினர் |
| (3) | திரு. வி. மாயன்,<br>(தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்),<br>63, கே.வி.ப்பி. தோட்டம், ஆர்.ஏ. புரம்,<br>சென்னை—600 028. | .. | உறுப்பினர் |

**ட்டி. பிரபாகரராவ்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**சி. கீதாபழனி,**
*இயக்குநர் (பொறுப்பு),*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

## அறிவிக்கை

*[அரசாணை (நிலை) எண் 92, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (I—1)த் துறை, நாள்: 13 ஜூலை 2009.]*

தமிழ்நாடு 1982ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பினை முறைப்படுத்தலும், பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 6ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன சட்டத்தின் விவர அட்டவணையின் 40ஆம் இனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விசைத்தறி தொழிலில் பணியமர்த்தப்பட்ட உடலுழைப்பு தொழிலாளர்களுக்கு, சமூகப் பாதுகாப்பு மற்றும் நல நடவடிக்கைகளுக்கு வகை செய்வதற்காக, தமிழ்நாடு மாநிலத்தில் ‘‘தமிழ்நாடு விசைத்தறி நூற்பாலை தொழிலாளர்களுக்கான நல வாரியம்’’ ஒன்றை இதனால் அமைக்கிறார்.

**ட்டி. பிரபாகரராவ்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**சி. கீதாபழனி,**
*இயக்குநர் (பொறுப்பு),*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

---

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.